

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (22.02.2024) சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை கூட்டரங்கில் மருத்துவப்பணியாளர் தேர்வாணையம் மூலம் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட 332 ஆய்வக நுட்புனர்களுக்கு பணிநியமன ஆணையினை வழங்கினார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சங்குமணி, மருத்துவம் மற்றம் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மரு.இளங்கோ மகேஸ்வரன், பொதுசுகாதாரத்துறை கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் ஆய்வக நுட்புனர்கள் உடனிருந்தனர்.

### இன்று தொடங்கும் தகவல் தொழில் நுட்ப 2 நாள் மாநாட்டில் பங்கேற்று

# முன்னேற்றத்தை விரைவாக முன்னகர்த்துவோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, பிப். 23 -

சென்னையில் இன்று தொடங்க உள்ள As Umagine TN 2024 என்ற தகவல் தொழில் நுட்ப 2 நாட்கள் மாநாட்டில் பங்கேற்று முன்னேற்றத்தை விரைவாக முன்னகர்த்தும் முயற்சியில் கை கோர்ப்போம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

“Umagine TN 2024” தகவல் தொழில் நுட்ப மாநாடு சென்னையில் நாளை (23.2.2024) தொடங்கவுள்ளதை யொட்டி முதலமைச்சர். மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

Umagine TN 2024 நாளை தொடங்குகிறது. நாளைய புதுமைகளை வடிவமைக்கும் நோக்கிலான பல அறிவார்ந்த அமர்வுகளிலும், துறைசார் சான்றோர்கள் பங்குபெறும் கலந்துரையாடல்களிலும் கலந்துகொண்டு பங்குபெறுங்கள்.

“Inform the present. Innovate the future” என்ற மையநோக்குடன் நடைபெறும் இந்த இரு நாள் மாநாட்டின் வழியே, முன்னேற்றத்தை விரைவாக முன்னகர்த்தும் முயற்சியில் கை கோப்போம்!

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

### இந்தியாவிலேயே கடந்த 3 ஆண்டுகளில்

# 12 இலட்சம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கித் தந்தது தமிழ்நாடுதான்!

## கழக அரசின் சாதனை! பேரவையில் - அமைச்சர் சி.வெ.கணேசன் ஆதாரங்களுடன் விளக்கம்!



**சென்னை, பிப். 23 -**

**சட்டப்பேரவையில் நேற்று முன்தினம், பேரவை விவாதத்தின் போது குறுக்கிட்டு விளக்கமளித்த தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன், “இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத சாதனையாக, தமிழ்நாட்டில் தளபதி தலைமையில் ஆட்சி அமைந்த கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 12 இலட்சம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கி சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

*சட்டப்பேரவையில் நேற்று, இது குறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு:-*

**ஆர்.பி. உதயகுமார்:** *இந்த அரசினுடைய சாதனையாக இளைஞர்களுக்கு அரசு வேலை வழங்கியதைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். அதிலே ஒரு சின்ன clarification. உங்களுடைய தேர்தல் அறிக்கையில் மூன்று இலட்சம் பேர்களுக்கு அரசு வேலை வாய்ப்பு தருவதாக, ஆண்டுக்கு 10 இலட்சம் பேர்களுக்கு, 5 ஆண்டுகளுக்கு 50 இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு தருவதாகச் சொல்லியருக்கிறீர்கள். நீங்கள் கொடுத்திருப்பது 28,000 பேர்தான். மற்றது எல்லாம் கருணை அடிப்படையில், TNPSC, சீருடைப் பணியாளர்கள் எல்லாம் சேர்த்து. ஆகவே, அந்தத் தகவல் என்பது சரியான தகவலாக இல்லை. ஆகவே, ஆண்டுக்கு 10 இலட்சம் என்ற வீதம் 50 இலட்சம் பேர்களுக்கும், மூன்றரை இலட்சம் பேர்களுக்கு அரசுப் பணி வழங்குவதற்கு அரசு முன்வருமா?*

**அமைச்சர் சி.வி. கணேசன்:** *தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தர வேண்டுமென்ற நோக்கத்தோடு அரசு தரப்பிலே, TNPSC- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாகப் பணிக்குச் செல்வோர் ஒருபுறம் இருந்தாலும், தனியார் தொழில் நிறுவனங்களில் இதுவரையிலே, வருகிற 24 ஆம் தேதியன்று 2 இலட்சம் இளைஞர்களுக்கு பணி நியமன ஆணையை வழங்குகின்ற அளவிற்கு இந்த அரசு படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினைப் பெற்றுத் தந்திருக்கிறது. அதேபோல, வருங்கால வைப்பு நிதி நிறுவனம் குறித்து ஒன்றிய அரசாங்கம் ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. அது என்ன வென்றால், இந்தியாவிலே, இதுவரையில் தமிழ்நாட்டில் 12 இலட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தந்த மாநிலம் தமிழ்நாடு என்ற செய்தியை வெளியிட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.*

*இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.*

### டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. தலைமையில்

# அமைப்புசாரா ஓட்டுநர் அணி நிர்வாகிகள் கூட்டம்!

## மாநில செயலாளர் டி.செங்குட்டுவன் அறிவிப்பு!

தி.மு.க. அமைப்பு சாரா ஓட்டுநர் அணியின் மாநில, மாவட்ட, மாநகர தலைவர்கள் மற்றும் அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் 25.02.2024 அன்று காலை 10.00 மணியளவில் சென்னை தேனாம்பேட்டை இளைஞரணி அலுவலகமான அன்பகத்தில், மாநிலத் தலைவர் டி.எம். கதிர்ஆனந்த் எம்.பி. தலைமையிலும், மாநில துணை செயலாளர்கள் டாக்டர் வை..முத்துராஜா எம்.எல்.ஏ. கே.தினகரன், ஏ.ஆர்.டி.உதயசூரியன், டாக்டர் ஆர்.சி.எம்.விஷ்ணுபிரபு, எம்.சிவராஜ், ஏ.கே..பூபதி, எஸ்.செல்லதுரை, எஸ். ராம்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

அது சமயம் மாநில நிர்வாகிகள், மாவட்ட, மாநகர தலைவர்கள், அமைப்பாளர்கள் மட்டும் அவசியம் தவறாமல் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: மார்ச் 1கழகத்தலைவர், முதல்வர் அவர்களின் பிறந்த நாள் விழா, 2024 நாடாளுமன்ற தேர்தல் குறித்து

**டி.செங்குட்டுவன்,**
செயலாளர்,
தி.மு.க அமைப்பு சாரா ஓட்டுநர் அணி.



சென்னை – குரோம்பேட்டை, இலட்சுமிபுரத்தில் அமைந்துள்ள ஜே.எம்.கே.எஸ். அரசு உயர் நிலைப் பள்ளியின் ஆண்டு விழா, தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் ஜி.காமராஜ், 29 வது வார்டு கவுன்சிலர் திருமதி ஜெ.சண்முகசுந்தரி ஜெயக்குமார், பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் டி.ஜெயக்குமார் ஆகியோர் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. மேலும் இவ்விழாவிற்கு அரிமா சங்க உறுப்பினர்கள், எஸ்.எம்.சி. உறுப்பினர்கள், முன்னாள் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். பள்ளியின் தலைமையாசிரியை திருமதி.எஸ்.மகேஸ்வரி ஆண்டறிக்கை படித்தார்.

### மதுரையில் எய்ம்ஸ் அறிவிக்கப்பட்டது போல இல்லாமல்

# கோவையில் நூலகம் கட்டி முடிக்கப்பட்டு ஜனவரி 2026 இல் திறக்கப்படும்!

## சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, பிப். 23–**

**கோவையில் நூலகம் அமைக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டதை பா.ஜ.க. உறுப்பினர் திருமதி. வானதி சீனிவாசன், அந்த நூலகம் எங்கே அமைக்கப்படும் எவ்வளவு நிதி ஒதுக்கப்படும் எப்போது ஆரம்பிப்பீங்க, எப்போது அந்தப் பணி முடிவடையும், என்று கேள்வி எழுப்பி இருந்தார்.**

**இதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று பதிலளிக்கையில் மதுரையில் எய்ம்ஸ் அறிவிக்கப்பட்டதைப் போல் இல்லாமல் குறிப்பிட்டக் காலத்திற்குள் கோவை நூலகம் கட்டி முடிக்கப்பட்டு 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அந்த நூலகம் திறந்து வைக்கப்படும் என்று தமது பதிலில் உறுதியுடன் தெரிவித்தார்.**

முதல்வர் அளித்த பதிலுரை வருமாறு:

பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் சட்டமன்றப் பேரவையில் நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றி இருக்கக்கூடிய உறுப்பினர்களுக்கு எல்லாம் மிகத் தெளிவாக, விளக்கமாக, விரிவாக நம்முடைய அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் பதிலளித்திருப்பது உள்ளபடியே பாராட்டுக்குரிய வகையில் (மேசையைத் தட்டும் ஒலி) அமைந்திருக்கிற காரணத்தால் என்னுடைய வாழ்த்துகளையும் மனதார நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நேற்றையதினம் விவாதத்தின்போது சில குறிப்பிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் வைத்த வினாவிற்கு விளக்கம் சொல்லியிருக்கிறார். ஆனால், அதேநேரத்தில், பாரதிய ஜனதா கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள் வைத்த கோரிக்கைக்கு ஏன் பதில் சொல்லாமல் விட்டுவிட்டார் என்று எனக்குப் புரியவில்லை. அவர் ஒரு கோரிக்கையை வைத்திருந்தார். கோவையில் நூலகம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பிற்கு நன்றி தெரிவித்துவிட்டு, அது எங்கே அமையவிருக்கிறது, எவ்வளவு நிதி ஒதுக்கப் போகிறீர்கள், எப்போது ஆரம்பிக்கப் போகிறீர்கள், எப்போது அந்தப் பணிகள் முடிவடையும் என்று கேள்விகளைக் கேட்டிருந்தார்கள். அது நிச்சயமாக உடனடியாக செயலாக்கத்திற்கு வரும். ஏனென்றால், இந்த ஆட்சி சொன்னதைச் செய்யும், சொன்னதைத் தாண்டியும் செய்யும், செய்வதைத்தான் சொல்லும். (மேசையைத் தட்டும் ஒலி)

மதுரையில் எவ்வாறு உலகத்தரம் வாய்ந்த கலைஞர் நூலகம் குறிப்பிட்ட காலத்திற்குள் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டிருக்கிறதோ, சென்னையில் கலைஞர் சிறப்பு பல்நோக்கு மருத்துவமனை, மதுரை அலங்காநல்லூரில் ஜல்லிக் கட்டுக்காக ஏறுதழுவுதல் அரங்கம் அமையப் பெற்றிருக்கின்றனவோ, இன்னும் சில தினங்களில் நம்முடைய கலைஞர் நினைவிடம் அமையவிருக்கிறதோ, அதேபோல் அதுவும் சொன்னபடி நிச்சயமாக இந்த ஆட்சியில் நடக்கும்.

ஆனால், திருமதி வானதி சீனிவாசன் அவர்களுக்கு நான் ஒன்றை மட்டும் உறுதியாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நிச்சயமாக மதுரையில் AIIMS அறிவிக்கப்பட்டதைப்போல் இல்லாமல், (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) குறிப்பிட்ட காலத்திற்குள் கட்டி முடிக்கப்படும். அதுவும் குறிப்பிட்ட நாளையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அது திறக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) திறப்பு விழா நிகழ்ச்சிக்கு உங்களுக்கு முறையாக அழைப்பு வரும். நீங்களும் வந்து விழாவில் கலந்துகொள்ள வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிலளித்தார்

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு – தயாநிதி மாறன் எம்.பி. முன்னிலை! வெ.பரிமளம் எம்.சி. தலைமை! துறைமுகம் கிழக்கில்

# தெருவோர சிறு வியாபாரிகள் 250 பேருக்கு நலத்திட்ட உதவிகள்!

## கவிஞர் காசிமுத்து மாணிக்கம் வழங்குகிறார்! பிராட்வே - ஜீல்ஸ் தெருவில், இன்று நிகழ்ச்சி!

*சென்னை, பிப். 23-*

*"மக்கள் முதல்வரின் மனித நேய விழா" - "தெருவோர வியாபாரிகள் குறை தீர்ப்போம்! திராவிட மணம் வீசும் மலர் கொடுப்போம்" எனும் முழக்கத்தோடு, கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா, சென்னை கிழக்கு மாவட்டம் - துறைமுகம் கிழக்குப் பகுதி 56 'அ' மற்றும் 56 ஆகிய வட்டக் கழகங்கள் சார்பில் நடைபெறுகிறது.*

*சாலையோர வியாபாரிகள் 250 பேருக்கு நல உதவிகள் வழங்கிடும் இவ்விழா இன்று (23.2.2024 - வெள்ளிக்கிழமை) மாலை 5.00 மணி அளவில் பிராட்வே - ஜீல்ஸ் தெருவில் நடைபெறுகிறது.*

*இந்நிகழ்ச்சிக்கு - 56வது வார்டு மாமன்ற உறுப்பினர் வெ.பரிமளம் தலைமை வகிக்கிறார்.*

*மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தயாநிதி மாறன் எம்.பி. மற்றும் எஸ்.இராஜசேகர், எஸ்.முரளி, க.பிரபு, எம்.விஜயகுமார், ஜி.எம். தேவன், பி.ஸ்ரீராமுலு, எம். ஷேக் அப்துல்லா, எம்.இப்ராஹிம் கனி, ஆர்.கலைச் செல்வி, பி.விஜயகுமார், எம்.வினாயகம், பா.ஜெகதீஷ், எல்.சம்பத்குமார், பா.பிரதீப்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*இந்நிகழ்ச்சியில் - கழக வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம் கலந்துகொண்டு, சாலையோர சிறு வியாபாரிகள் 250 பேருக்கு நல உதவிகள் வழங்குகிறார்.*

*மேலும் - இந்நிகழ்ச்சியில், மேயர் பிரியாராஜன், கோ.ஏகப்பன், தேவஜவகர், புனிதவதி எத்திராசன், இசட்.ஆசாட், ராஜேஷ் ஜெயின், எல்.நவீன், ந.சுந்தரம், எஸ்.சந்தியாகு, செ. தமிழ்வாணன், வி. சந்தான லட்சுமி, சி.ப.ஜெயராமன், மே.ஜனார்த்தனன், கே.ஆர். அபரஞ்சி, ம.முத்துக்குமார், எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், ஆ.நா.பார்த்திபன், க.கவியரசு, மா.ஜெய்சங்கர் பா.கதிரவன், ஆர்.ரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, டி.சதீஷ்குமார், சேப்பாக்கம் வே.பா.பிரபாகரன்,*

*டி.போஸ், பி.சகாயராஜ், கோல்டன் எஸ். சுரேஷ், இ.ஜெய்சங்கர், எஸ்.யாசர், சர்தார் மீரான், டி.பிலிப்ஸ், கட்பீஸ் ஜி. பெருமாள், கே.பார்த்த சாரதி, பி.திவ்யா, எஸ்.நாகராசு, வி.மகேஷ், டி.பாபு, ஆர்.பார்த்தசாரதி, எஸ். வெங்கடேசன், பி.எம்.பிரகாஷ், வி.கே.சீனிவாசன், செ.தினேஷ், கே.குமார், ம.கோபாலகிருஷ்ணன், கே.நரேஷ், பைசல், ஐ.பிரதீப், வி.நவீன், இ.பாலாஜி, எஸ்.தனசேகரன், எலிசபெத் செல்வமணி, பி. ஆர்த்தி, மகாலிங்கம், வி.கோமதி, என்.ஆர்.பிரபாகரன் ஆகியோரும் கலந்துகொள்கின்றனர்.*

*வட்டச் செயலாளர்கள் ம.பரத்குமார், டி.கதிரவன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.*

### அண்ணாநகர் தெற்குப் பகுதி

# வட்டச் செயலாளர்கள் கூட்டம்!

## நா.இராமலிங்கம் வேண்டுகோள்!

*சென்னை,பிப்.23-*

*சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் தெற்கு பகுதி வட்ட செயலாளர்கள் பாக ஒருங்கிணைப்பாளர்கள், கூட்டம் 23.02.2024 வெள்ளி கிழமை மாலை 5.00 மணியளவில் சென்னை 600106, அரும்பாக்கம் எம்.எ.டி.ஏ.காலனி, பஸ் டெப்போ பின்புறம் உள்ள G.G. மஹால் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.*

*ஆலோசனை வழங்குபவர்*

*சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு எம்.சி., மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், எம்.கே.மோகன் எம்.எல்.ஏ., , மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்,அண்ணா நகர் தொகுதி கார்த்திக் மோகன், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார் எனவே மேற்கண்ட கூட்டத்திற்கு வட்ட செயலாளர்கள், பாக ஒருங்கிணைப்பாளர்கள் பகுதி நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.*

### விழுப்புரம் வடக்கு மாவட்டம்

# மரக்காணம் மேற்கு, மரக்காணம் மத்திய ஒன்றிய பிரிப்பு அறிக்கையில் திருத்தம்

## தலைமைக் கழகம் அறிவிப்பு

*கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெறவும் 'முரசொலி'யில் வெளியிடப்பட்ட ஒன்றிய பிரிப்பு அறிக்கையில்;*

*விழுப்புரம் வடக்கு மாவட்டம், மரக்காணம் மேற்கு ஒன்றியத்தில் இடம் பெற்றிருந்த கீழ்சிவிரி, டி.நல்லாளம் ஆகிய 2 ஊராட்சிகள் மரக்காணம் மத்திய ஒன்றியக் கழகத்தின் கீழும்;*

*மரக்காணம் மத்திய ஒன்றியத்தில் இடம் பெற்றிருந்த ஆடவல்லிகூத்தான் ஊராட்சி மரக்காணம் கிழக்கு ஒன்றியக் கழகத்தின் கீழும் இயங்கும்.*

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை – 18
நாள்- 22.2.2024

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.



சென்னை வடக்கு மாவட்டம், இராயபுரம் கிழக்கு பகுதி, 50வது வட்டத்தில் தமிழ்நாடு முதல்வர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 71 வது பிறந்த நாளையொட்டி இராயபுரம் மேற்குப் பகுதி, 52 ஆவது வட்டம் ஆட்டுத் தொட்டி அருகில் உள்ள முதியோர் இல்லத்திற்குச் சென்று முதியோர்களை சந்தித்து அவர்களோடு உரையாடி அவர்களுக்கு கேக், அறுசுவை உணவு, பிஸ்கட் வகைகளை முன்னாள் மாமன்ற உறுப்பினர்கள் மா.தாஸ், ஜான் மேரிதாஸ் ஆகியோர் நிகழ்ச்சி ஏற்பாட்டில் வழங்கினர். நிகழ்ச்சியில் எஸ்.குமார், ஆர்.ராஜன், எஸ்.பெரியநாயகராஜ், வி.தயாளன், எஸ்.ஏ.ராஜா, பி.உதயகுமார், கு.சக்திவேல், ஜெ.ராஜ்குமார், என்.கலைமணி, எல்.பாபு, கே.பாஸ்கர், எஸ்.தேவநேசன், கட்பீஸ் சந்திரன், எஸ்.குணா, பிரவீண், கே.புஷ்பராணி, பி.ஜோசப், ஜெ.மோன்சி, செல்வி ஜெ.மரிய ஷாரோன், சிறுமி ஜெ.கார்மல் டான்யா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.